**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**

**29.01.2021 ம் தேதி வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்**

**தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜனவரி–2021 –ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–** பதிவு செய்யலாம்

2) 2019–2020 ம் ஆண்டிற்கு C மற்றும் D பரிவு பணியாளர்களுக்கு மிகை ஊதியம் வழங்க அரசாணை (நிலை) எண்.1 நிதி( படிகள்) துறை நாள். 04.01.2021 எண்ணிட்ட அரசாணையில் 240 நாட்களுக்கு மேல் உள்ள பணியாளர்களுக்கு ரூ.3000/– உச்ச வரம்பாக நிர்ணயித்தும், 240 நாட்களுக்கு கீழ் பணிபுரிந்தவர்களுக்கு சதவிகித அடிப்படையில் வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-1)** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2) ஏற்படும் செலவினங்களுக்கு அனுமதி வழங்கலாம்.

3) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகனங்களை இயக்க நிரந்தர ஓட்டுநர் பணியிடம் இல்லாததால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின் அடிப்படையில் 7 ஓட்டுநர் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய திரு. உசைன் ஒப்பந்ததாரருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி அனுமதி காலம் 31.12.2020 உடன் காலவதியாவதால் 01.01.2021 முதல் 31.03.2021 வரை 3 மாத காலத்திற்கு தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின் அடிப்படையில் பழைய ஒப்பந்ததாரர் திரு. உசைன் மூலமாகவே 3 மாத காலத்திற்கு பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின் அடிப்படையில் 7 ஓட்டுநர் பணியாளர்களை திரு. உசைன் ஒப்பந்ததாரர் மூலம் 01.02.2021 முதல் 30.04.2021 வரை 3 மாத காலத்திற்கு சப்ளை செய்யவும் அதற்கு ஏற்படும் செலவினம் ரூ.5.37 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

4) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள உரக்கிடங்கிற்கு மாவட்ட ஆட்சித் தலைவ அவர்களின் விலைவிகித பட்டியலின் அடிப்படையில் 7 ஒப்பந்த பணியாளர்களை சப்ளை செய்ய திரு. உசைன் என்பவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலம் 31.12.2020 உடன் காலவதியாவதால் நிர்வாக நலன் கருதி 01.01 2021 முதல் 31.03.2021 வரை உள்ள 3 மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின் அடிப்படையில் பழைய ஒப்பந்ததாரர் திரு. உசைன் மூலமாக தொடர்ந்து 3 மாத காலத்திற்கு பணியாளர்களை சப்ளை செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின் அடிப்படையில் 7 ஒப்பந்த பணியாளர்களை திரு.உசைன் ஒப்பந்ததாரர் மூலம் 01.01 2021 முதல் 31.03.2021 வரை 3 மாத காலத்திற்கு சப்ளை செய்யவும் அதற்கு ஏற்படும் செலவினம் ரூ. 3.99 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

5) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள கனரக வாகனங்கள் இயக்க நிரந்தர பணியிடம் இல்லாததால் மாவட்ட ஆட்சித் தடைலவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலை விகித பட்டியலின் அடிப்படையில் திரு. உசைன் ஒப்பந்ததாரர் மூலம் 5 ஓட்டுநர் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி அனுமதி காலம் 01.01.2021 உடன் முடிவடைந்ததால் மேலும் தொடர்ந்து 3 மாத காலத்திற்கு 01.02.2021 முதல் 30.04.2021 வரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின் அடிப்படையில் பழைய ஒப்பந்ததாரர் திரு. உசைன் மூலமாக தொடர்ந்து 3 மாத காலத்திற்கு பணியாளர்களை சப்ளை செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலை விகித பட்டியலின் அடிப்படையில் 5 ஓட்டுநர் பணியாளர்களை திரு. உசைன் ஒப்பந்ததாரர் மூலம் 01.02.2021 முதல் 30.04.2021 வரை 3 மாத காலத்திற்கு சப்ளை செய்யவும் அதற்கு ஏற்படும் செலவினம் ரூ. 3.72 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

6) வட்டாட்சியர் கூடலூர் அவர்களிடமிருந்து கிடைக்கபெற்ற கடிதம் ந.க.அ3 எண்.6466/2020 நாள் 29.01.2021 ல் கூடலூர் வட்டம் கூடலூர் 1 கிராமம் புல எண்கள் 552/1, 450/1 காலைகளில் 0.04 ஏக்கர் நிலத்தில் முதுமலை மாற்றுக்குடியமர்வு திட்டத்தில் வெளியேறி மேற்படி புல எண்களில் வாழ்ந்து வரும் 2 நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க ஏதுவாக நிலமாற்றம் செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்ப வேண்டியுள்ளதால் நகராட்சியின் தீர்மானம் கேட்கப்பட்டுள்ளது. எனவே கருத்துரு வழங்க மன்ற பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** அனுமதி வழங்கலாம்

7) இந்நகராட்சியின் பொதுபிரிவு,பொது சுகாதாரப் பிரிவு, பொறியியல் பிரிவு ஆகியவற்றில் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ஆம் ஆண்டு விலை விகித பட்டியலின் அடிப்படையில் சப்ளை செய்ய திரு. உசைன், ஒப்பந்ததாரருக்கு 01.10.2020 முதல் 31.12.2020 வரை உள்ள 3 மாத காலத்திற்கு நகர் மன்ற தீர்மானம் எண்.597 A நாள்.30.09.2020 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அனுமதி காலம் 31.12.2020 உடன் காலவதியாவதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் ஆண்டு விலைவிகித பட்டியலின் அடிப்படையில் திரு. உசைன் ஒப்பந்ததாரரிடம் நிர்வாக நலன் கருதி மேலும் 3 மாத காலத்திற்கு 01.01.2021 முதல் 31.03.2021 வரை தொடர்ந்து சப்ளை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2020 ம் வருட விலைவிகித பட்டியலின் அடிப்படையில் திரு. உசைன் ஒப்பந்ததாரர் மூலம் 01.01.2021 முதல் 31.03.2021 வரை உள்ள 3 மாத காலத்திற்கு பணியாளர்களை சப்ளை செய்யவும் அதற்கான செலவினம் ரூ. 3.60 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

8) 29.01.2021 அன்று பாரதிதாசன் வணிக வளாக கட்டண கழிப்பிடத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட 4 நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு வின்வருமாறு ஏலம் கோரியுள்ளனர்.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு.பாபு, த/பெ.ஜீவகன், கூடலூர் | ரூ.180000/– |
| 2 | திரு.எம்.கிருஷ்ணண், த/பெ.மாறன், கூடலூர் | ரூ.151000/– |
| 3 | திரு.செல்வபாரதி, த/பெ.ராஜன், கூடலூர் | ரூ.100000/– |
| 4 | திரு.ஏஜாஸ் அஹம்மது,த/பெ.நூார் அஹம்மது, கூடலூர் | ரூ.130500/– |

மேற்கண்ட தினத்தில் இரண்டு நபர்கள் ஒப்பந்தபுள்ளி தொகை செலுத்தி இதில் ஒரு நபர் மட்டும் ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளார். இன்னொர் நபர் ஒப்பந்தபுள்ளி ஏதும் வழங்கவில்லை. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்ட நபர்கள் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.செல்வபாரதி, த/பெ.ராஜன், கூடலூர் | ரூ.201000.00 |

ஏலத்தில் கலந்து கொண்ட 4 நபர்கள் வரிசை எண் ஒன்றில் கண்ட திரு.பாபு என்பவர் உயர்ந்தபட்ச தொகையாக ரூ.180000/– த்திற்கு ஏலம் கேட்டுள்ளார். மேலும் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்ட திரு.செல்வபாரதி,கூடலூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையாக ரூ.2010000/–க்கு ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளார். எனவே ஏலத்தொகையைவிட ஒப்பந்தபுள்ளி தொகை அதிகமாக உள்ளதால் உயர்ந்தபட்ச ஏலத் தொகை வழங்கிய திரு.செல்வபாரதி, கூடலூர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியை மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய திரு.செல்வபாரதி, கூடலூர் என்வரின் உயர்ந்தபட்ச தொகை ரூ.201000/–ஐ ஏற்று அவருக்கு உத்திரவு வழங்க மற்றும் அனுமதி வழங்கலாம். மேலும் மேற்படியாளரின் ஏலத்தொகையிலிருந்து அடுத்த ஆண்டு 2022 – 2023 ம் ஆண்டு 5% குத்தகை உயர்வு செய்து கொள்ளவும் 3 ம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையிலிருந்து 5% குத்தகை உயர்வு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

9) 23.11.2020 அன்று குடிநீர் வாகனம் TN 43 Z 4443 FC பணிபார்க்க விலைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | பயனீர் ஆட்டோ கேரேஜ் கூடலூர் | – | ரூ.981010/– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், ராஜா நகர், திருப்பூர் | – | ரூ.107670/– |
| 3 | கூடலூர் ஆட்டோ கேரேஜ், கள்ளிக்கோட்டை சாலை, கூடலூர் | – | ரூ.107471/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்டுள்ள பயனீர் ஆட்டோகேரேஜ், கூடலூர் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணிகளை செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – **1)** பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் TN 43 Z 4443 பழுதுகள் சரி செய்து வட்டாரபோக்குவரத்து அலுவலரிடம் சான்று பெற மன்றம் அனுமதிக்கலாம்

**2)** உள்ளூர் நிறுவனமான பயனீர் ஆட்டோ கேரேஜ் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணிகள் செய்து கொள்ள அனுமதியும் அதற்கான செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

10) **10.11.2020** அன்று குடிநீர் வாகனம் TN 43 Z 5433 இரண்டு டயர் புதிதாக விநியோகம் செய்யவும் நான்கு மற்றும் மாற்று டயர் ரீபெல்ட் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **1)** | டயர் எக்ஸ் ஆட்டோ கேரேஜ், செம்பாலா, கூடலூர் | – | ரூ.**47350/–** |
| **2)** | பாப்புலர் டயர்ஸ், கள்ளிக்கோட்டை சாலை | – | ரூ.**50750/–** |
| **3)** | பவர் பிட் டயர்ஸ், செம்பாலா, கூடலூர் | – | ரூ.**50050/–** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்**1** ல் கண்டுள்ள டயரக்ஸ் ஆட்டோ கேரேஜ் செம்பாலா, கூடலூர் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று வேலை உத்திரவு வழங்க பணிகளை செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் TN 43 Z 5433 இரண்டு டயர்கள் புதிதாக விநியோகம் செய்யவும் நான்கு டயர் மற்றும் மாற்று டயர் ரீபெல்ட் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** உள்ளூர் நிறுவனமான டயரக்ஸ் ஆட்டோ கேரேஜ் செம்பாலா, கூடலூர் என்ற நிறுவனத்திற்கு குறைந்த விலைப்புள்ளி ஏற்று பணிகள் செய்து கொள்ள அனுமதியும் அதற்கான செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

11) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட **21** வார்டுகளிலும் கடந்த மாதங்களில் உருவான பருவமழை மற்றும் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையினால் மழைநீர் சீராக வெளியேற இயலாமல் பாலங்களில் அடைப்பு ஏற்பட்டு மழைநீர் கால்வாய்களில் பழுது ஏற்பட்டதினால் மழைநீர் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்து பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் மேற்படி பகுதியில் மழையினால் சேதமான கால்வாய்கள், தடுப்புசுவர்கள் மற்றும் நடைபாதைகள் ஆகியவற்றினால் பொதுமக்கள் அடிப்படை வசதிகள் இன்றி மிகுந்த சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, பொதுமக்களின் அடிப்படை வசதிகளின் தேவைகளின் அடிப்படையில் மேற்படி பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிறுபாலங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உரிய மதிப்பீடுகள் தனித்தனியாக தயார் செய்த மொத்த மதிப்பீடு தொகை ரூ.**70.00** இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீட்டினை இத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ளேன். எனவே மேற்படி பணிகளை மேற்கொள்ள நகராட்சியின் நிதி நிலை திருப்திகரமாக இல்லாத காரணத்தால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் நிதி திட்டம் **2020–2021** ல் நிதி ஒதுக்கீடு வழங்க கோரி மாநில உயர்மட்ட குழுவில் பொருள் வைத்து நிதி ஒதுக்கீட்டினை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்து உரிய நிதி ஒதுக்கீட்டினை பெற்றுத் தரக்கோரி பிரேரணைகளை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **எண்ணிக்கை** | **மதிப்பீடு தொகை** |
|---|---|---|---|
| **1** | கூடலூர் நகராட்சி வார்டு எண் **15** மங்குழி பகுதியில் பாலம் அமைத்தல் | **1** | **42.00** |
| **2** | கூடலூர் நகராட்சி வார்டு எண் **20** கோல்டன் அவன்யு பகுதியில் பாலம் அமைத்தல் | **1** | **28.00** |
| | **மொத்தம்** | | **70.00** |

**அலுவலக குறிப்பு:** நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு பருவமழையினால் சேதமான சிறுபாலங்கள் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை உட்கட்டமைப்பு பணிகளை அடிப்படை வசதிகள் உட்கட்டமைப்பு திட்ட நிதியின் மூலம் மேற்கொள்ள மாநில உயர் மட்ட குழுவில் பொருள் வைத்து முழுமான்யமாக நிதி ஒதுக்கீட்டினை பெற்று தரக் கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களால் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணையினை பரிந்துரை செய்து திட்ட நிதி ஒதுக்கீட்டினை பெற்றுப் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

12) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கும் குடிநீர் வாகனம் TN 43 Z 5433 வாகனத்திற்கு வருடாந்திர புதுப்பித்தல் (FC) காண்பிக்கப்பட வேண்டியுள்ளதால் இவ்வாகனத்தின் பழுது பணிகளை செய்யவும் மற்றும் (FC) காண்பிக்கவும் ஆகும் செலவினம் ரூ.**99000/–** ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**13)** இந்நகராட்சிக்குட்பட்ட தொரப்பள்ளி பகுதியில் கடந்த **2007** ம் ஆண்டு முதல் **2015** ம் ஆண்டு வரை கொட்டப்பட்ட திடக்கழிவுகளை உயிரி பிரித்தெடுத்தல் முறையில் அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்காக மேற்கண்ட இடத்தில் திடக்கழிவுகளை அளவீடும் பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் விபரம் மன்றத்தின்பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **தொகை** |
|---|---|---|
| 1 | Sun Surveying and mapping, Coimbatore | 40500.00 |
| 2 | DYSR Digital Surveying and Engg,Madurai | 38350.00 |
| 3 | SR Land survey Consultant,Trichy | 43500.00 |

**அலுவலக குறிப்பு – 1)** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s.DYSR Digital Surveying and Engg, Madurai நிறுவன விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**2)** தேசீய பசுமை தீர்ப்பாய தீர்ப்பினை நிறைவேற்றும் பணி அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

14) இந்நகராட்சிக்குட்படட தொரப்பள்ளி பகுதியில் கடந்த 2007 ம் ஆண்டு முதல் 2015 ம் ஆண்டு வரை கொட்டப்பட்ட திடக்கழிவுகளை உயிரி பிரித்தெடுத்தல் முறையில் அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்காக மேற்கண்ட இடத்தில் திடக்கழிவுகளை அளவீடும் பணியினை தனியார் முகமை மூலம் மேற்கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/– ற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** தேசீய பசுமை தீர்ப்பாய தீர்ப்பினை நிறைவேற்றும் பணி அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்.

15) இந்நகர்மன்ற தீர்மானம் எண் 189 நாள் 30.09.2019 ன்படி பொது சுகாதாரப் பிரிவில் திருவாளர்கள்.அட்சயா அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் 80 துாய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த காலம் 31.10.2020 உடன் முடிவடைந்தால் 01.11.2020 முதல் 31.01.2021 வரை நகர்மன்ற தீர்மானம் எண் 613 நாள் 29.10.2020 ன்படி பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. புதிய ஒப்பந்தபுள்ளி கோர அனுமதி வேண்டி நகராட்சிநிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.2467/2020/எச்1 நாள் 25.09.2020 வாயிலாக கருத்துரு அனுப்பபட்டுள்ளது. பொது சுகாதார பணிகள் பாதிக்காத வண்ணம் பணியினை மேற்கொள்ள திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு மேலும் ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் (01.02.2021 முதல் 28.02.2021 வரை) அதற்கான தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

16) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 மார்தோமா நகர் காட்டு நாயக்கன் பாடியில் நடைபாதை அமைக்க நுழைவு வரி திட்டம் 2019–2020 ன் கீழ் 9.80 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை கடித எண் Rc.D3 No.777/2020 நாள் 01.10.2020 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 19.11.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியது வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 மார்தோமா நகர் காட்டு நாயக்கன் பாடியில் நடைபாதை அமைத்தல் | ரூ.9.80 | திருவாளர்.S.S.&Co | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| | | | திரு.முகம்மது யாசின் | மதிப்பீட்டை விட 0.22% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் 0.01% குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.S.S.&Co அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** 0.01% குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த திருவாளர்.S.S.&Co அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

17) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 ல் நந்தட்டி பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்தல் பணிக்கு சிறப்பு பகுதி மேம்பாட்டு 2019–2020 திட்ட நிதியின் செயல்முறை ஆணை கடித எண் Proc No.Rc No.Acct280/2020–1 நாள் 20.03.2020 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 ல் நந்தட்டி பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்தல் | ரூ.23.00 | திருவாளர்.S.S.&Co | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| | | | திரு.முகம்மது யாசின் | மதிப்பீட்டை விட 0.22% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் 0.01% குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.S.S.&Co அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** மேற்படி பணியானது திட்ட பணியாக இருப்பதால் உரிய காலத்தில் செய்து முடிக்க வேண்டி இருப்பதாலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு பணி உத்திரவு வழங்கியதையும் ஏற்கலாம்.

18) இந்நகராட்சிக்குட்பட்ட இரும்பு பாலம் பகுதியில் பம்பு அறையில் உள்ள 40HP பம்பு மற்றும் மோட்டார் பழுது பார்த்தல் நம்பர் 4 பகுதியில் மோட்டார் அறையில் சம்பு பழுது பார்த்தல், 12HP மோட்டார் பழுது பார்த்தல் நகராட்சிக்குட்பட்ட பேரூந்து நிழற்குடைக்கு வர்ணம் பூசுதல், கே கே நகர் கழிப்பிடம் பழுது பார்த்தல், பாரதமாநில வங்கி வளாகம் கழிப்பிடம் பழுது பார்த்தல் , வண்டிபேட்டை கழிப்பிடம் பழுது பார்த்தல் மற்றும் கோக்கால் பகுதியில் உள்ள கழிப்பிடம் பழுது பார்த்தல் பணியை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 612 நாள் 29.10.2020 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 29.01.2021 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட இரும்பு பாலம் பகுதியில் பம்பு அறையில் உள்ள 40HP பம்பு மற்றும் மோட்டார் பழுது பார்த்தல் நம்பர் 4 பகுதியில் மோட்டார் அறையில் சம்பு பழுது பார்த்தல், 12HP மோட்டார் பழுது பார்த்தல் நகராட்சிக்குட்பட்ட பேரூந்து நிழற்குடைக்கு வர்ணம் பூசுதல், கே கே நகர் கழிப்பிடம் பழுது பார்த்தல், பாரதமாநில வங்கி வளாகம் கழிப்பிடம் பழுது பார்த்தல் , வண்டிபேட்டை கழிப்பிடம் பழுது பார்த்தல் மற்றும் கோக்கால் பகுதியில் உள்ள கழிப்பிடம் பழுது பார்த்தல். | ரூ.9.50 | திரு.ஜெயநாதன் | மதிப்பீட்டை விட 0.09% குறைவு |
| | | | திரு.ஸ்டீபன் சகாய ராஜ் | மதிப்பீட்டை விட 1.21% அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.09% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.ஜெயநாதன் அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** 0.09% குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த திரு.ஜெயநாதன் அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

19) இந்நகரா்டசிக்கு சொந்தமான ஆய்வு மாளிகைக்கு தேவையான பொருட்கள் வாங்கியதற்கும் அங்கு உபயோகபடுத்தப்படும் போர்வைகள்,மெத்தை விரிப்புகள்,ஜன்னல் விரிப்புகள் ஆகியவைகள் சலவை செய்ததற்கான தொகை ரூ.17740/– ஐ திரு.ரா.சந்திரசேகர் ஆய்வு மளிகை காப்பாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

20) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 ல் ஹில்வியூ சாலையில் சிமெண்ட் கான்கீரிட் மூலம் சாலையை விரிவாக்கம் செய்வதற்கு பொது நிதியின் கீழ் ரூ.9.90 இலட்சத்திற்கு அன்று நடை பெற்ற நகமன்ற கூடட பொருள்களின் தீர்மானம் எண் ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி ம் நாள் மாலை 3.00 மணிக்கு பெறப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5ல் ஹில்வியூ சாலையில் சிமெண்ட் கான்கீரிட் மூலம் சாலையை விரிவாக்கம் செய்தல் | 9.90 | திரு.செல்லதுரை | மதிப்பீட்டை விட 0.4% குறைவு |
| | | | திரு.பழனியப்பன் | மதிப்பீட்டை விட 0.12% அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.04% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.செல்லதுரை அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்

**2)** குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.செல்லதுரை அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

21) இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கும் பொலீரோ ஈப்பு வாகனம் TN 43 Z 4203 வாகனத்திற்கு கிளட்ச், பிரேக்பேடு, பிரேக் சஸ்பன்சன், போல்ஜாயின்ட், பேரிங் நான்கு, வீல் செர்வீஸ், லிஸ்ராடு மற்றும் ஆயில் சர்வீஸ் பழுது ஏற்பட்டுள்ளதால் இப்பழுதுகளை சரி செய்ய ஆகும் செலவினம் ரூ.20000/–ற்கு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

22) இந்நகராட்சியின் ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள பொலீரோ ஈப்பு வாகனம் TN 43 X 6111 வாகனத்தன் நான்கு டயர்கள் முற்றிலும் தேய்ந்த நிலையில் வாகனம் இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. எனவே புதிய நான்கு டயர்கள் விநியோகம் பெற ஆகும் செலவினம் ரூ.35000/– ற்கு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

23) இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN 43 Y 0437 வாகனத்தின் பேட்டரி பழுது ஏற்பட்டுள்ளதால் புதிய பேட்டரி வாங்கி பொருத்துவதற்கு திருவாளர் யூ.வி.ஆட்டோ எலக்டாரினிக்ஸ், கூடலூர் நிறுவனத்தின் மூலம் பணி செய்யவும் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விலைபுள்ளிதாரரின் பணிகள் | திருவாளர்.யூ.வி.ஆட்டோ எலக்ட்ராணிக்ஸ் | திருவாளர் சாஸ்தா ஆட்டோ எலக்ட்ராணிக்ஸ் | திருவாளர் முருகன் ஆட்டோ எலக்ட்ராணிக்ஸ் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN 43 Y 0437 புதிய பேட்டரி விநியோகம் செய்தல் | ரூ.8500/– | ரூ.8750/– | ரூ.8800/– |

**அலுவலக குறிப்பு –** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைபுள்ளி வழங்கிய திருவாளர்.யூ.வி.ஆட்டோ எலக்ட்ராணிக்ஸ் கூடலூர் அவர்களின் தொகை ரூ.**8500/–** ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

**24)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **14** காளம்புழா பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மின் மயான எரியூட்டு தகன மேடைக்கு இயக்க பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் சடலங்கள் எரிப்பதற்கு சிரமமாக உள்ளதால் பழுதுகளை சரி செய்ய தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**3.10/–** இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**25)** இந்நகராட்சியின் **2020–2021** ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி (நீலகிரி)**